LIBRARY
5 OCT 2005
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## FOURTH YEAR/ FIRST SEMESTER EXAMINATION IN BUSINESS ADMINISTRATION/ COMMERCE/ ECONOMICS (PROPER/ REPEAT)

## 2003/ 2004 (NOV./ DEC. 2004)

## COM 4044 SMALL BUSINESS MANAGEMENT & ENTREPRENEURSHIP

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. றொபினின் சூட்டிறைச்சி (Robin's Barbecue)

திரு றொபின் என்பவர் ஒரு பாரிய இறைச்சி உணவுகளை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் ஒரு விற்பனையாளராக கடந்த ஆறு வருடங்களாக வேலை செய்கின்றார். சிறிது காலத்திற்கு முன் தனது தொழிலிலும், முதலாளியிலும் நிறுவனத்திலும், அதிருப்தி நிலை ஏற்பட்டது. திரு றொபின் தனது தொழில் நிலையினை மதிப்பிடுகையில் அவர் பின்வரும் முடிவுகளை எடுத்தார்.

1. அவர் தனது முதலாளியை வெறுக்கிறார்.
2. அவர் அந்நிறுவனத்தில் சிறந்த விற்பனைப் பிரதிநிதியாக பதிவு செய்யப்பட்ட போதிலும், மற்றைய விற்பனையாளர்களுடன் ஒப்பிடும் போது அவர் கடின உழைப்பாளராக இருப்பதை உணர்ந்தார். இருப்பினும் அவருக்குப் போதுமான தொழில் முன்னேற்றங்கள் வழங்கப்படவில்லை. அது வழங்கப்பட வேண்டுமென்ற முடிவிற்கு வந்தார்.
3. அவர் நிறுவனத்திற்கு முன்னேற்றகரமான திட்டங்களை முன்வைத்தார். இதன் மூலம் நிறுவனம் நிலையான இலாபத்தினைப் பெறக்கூடியதாக இருந்தது. இதனை அங்கீகரிக்கும் முகமாக நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் அவரின் பெயர் பிழையாக எழுதப்பட்டிருந்தது.
4. விற்பனைத் தொழிலை தகுதி குறைவான தொழிலாகக் கருதினார்,
5. அவர் தனது வேலை ஒரு பெரிய சவாலாக இருக்குமென நம்பவில்லை.
6. சாதகமான முடிவாக அவர் வாடிக்கையாளர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைந்தார்.

றொபின், அவரது மனைவி மற்றும் நண்பர்களுடன் இரண்டு நகர பரிபாலனத்துடன் தொடர்புடைய நிறுவனத்தில் அடிக்கடி சூட்டிறைச்சி சமையல் உணவுகளை வழங்கி பொழுதைப்போக்கினார். இந்நிறுவனத்தில் றொபின் ஓர் அங்கத்தவராவார். இந் நிறுவனத்தில் சூட்டிறைச்சி உணவுகளைத் தயாரிப்பதில் ஒரு முக்கிய கருவியாக விளங்கினார். இந்தச் சூட்டிறைச்சி உணவினைச் சுவைத்த ஒவ்வொரு நபரும் றொபினைப் பாராட்டினர். 'இத்தகைய சுவையுடைய உணவை இதற்கு முன்னர் சுவைத்ததே இல்லை' எனப் பலர் பாராட்டினர். பலர் றொபினை ஓர் உணவு விடுதி ஒன்றினை ஆரம்பிக்கும்படி கூறினார்கள். இத்தகைய கருத்துக்களை றொபின் தன்னுடைய கனவத்திற்கு எடுத்துக் கொண்டார். அவர் 50,000 சனத்தொகை கொண்ட தனது நகரத்தில் ஒரு மேலைத்தேய வகையான உணவு விடுதி ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டார்.

றொபின் வாடகைக்கு நல்ல பொருத்தமான இடத்தினை தெரிவு செய்தார். இவ்விடம் சூட்டிறைச்சி உணவு விடுதியை மேலைத்தேய சூழலுக்கேற்ப மாற்ற சிறு அளவான மாற்றங்களே தேவைப்பட்டன. திரு றொபின், உணவு விடுதிக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களின் விலை தொடர்பாக விநியோகஸ்தர்களுடன் தொடர்பு கொண்டார். றொபினின் சேமிப்பானது உபகரணங்களுக்கான செலவை ஈடுசெய்யவும் அதனை செம்மைப்படுத்தவும், மேலதிகமாக அவரது வாழ்க்கைச் செலவிற்கும் போதுமானதாக இருந்தது.

எவ்வாறாயினும் திரு றொபின் சிறுவியாபாரம் தொடர்பான அனுபவம் எதுவும் இல்லாதவர். அத்துடன் தனது சேமிப்பில் பெரும்பகுதியை முதலீடு செய்வதற்கும் தயங்கினார். எனினும் தற்போதைய வேலையில் திருப்தியின்மை காரணமாக அத்தொழிலை விட்டார். இம்முதலீட்டிற்குச் சாதகமாக அவரது மனைவி செயற்பட்டதால், றொபினின் வியாபார செயற்பாடுகளிற்கும் தன்விருப்பப்படி உதவினார்.

வினாக்கள் :

1. றொபினின் தனிப்பட்ட குணாதிசியங்கள் தனிநபர் வியாபார வெற்றிக்கு பங்களிப்புச் செய்யும் என நீர் நம்புகின்றீரா? விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

2. றொபின் தனது சிறுவியாபார செயற்பாட்டினால் திருப்தியடைந்துள்ளார் என்பதை நீர் உணருகின்றீரா?

**(04 புள்ளிகள்)**

3. றொபின் ஒரு சிறுவியாபார உரிமையாளராக வெற்றி பெறுவார் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகத் தெரிகின்ற சாதகமான சில காரணிகள் எவை?

**(05 புள்ளிகள்)**

LIBRARY
25 OCT 2005
Eastern University, Sri Lanka

4. றொபின் தனது சொந்த வியாபாரத்தை ஆரம்பிப்பதில், பாதகமாகவுள்ள சில காரணிகள் எவை? அவற்றை அவர் எவ்வாறு முறியடிக்கலாம்?

(06 marks)

5. றொபின், அவரே உணவுச்சாலையின் உரிமையாளராகவும், முகாமையாளராகவும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு நீர் ஆலோசனை வழங்குவீரா? உமது ஆலோசனையை நியாயப்படுத்துக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் **25** புள்ளிகள்)

02. i. ஒரு சிறு வியாபாரத்தின் வாழ்க்கைச் சுற்றுவட்டத்தின் பிரதான படிநிலைகளைக் குறிப்பிடுக.

ii. இலங்கையில் சிறுவியாபாரங்களின் விசாலத்தினை மதிப்பிடுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

iii. புதிய உற்பத்தி நிறுவனமொன்றின் அமைவிடத்தைத் தெரிவு செய்கையில் ஒரு தொழில் முயற்சியாளரினால் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை?

iv. அநேகமான சிறு வியாபாரங்கள் ஆரம்பிக்கப்பட்டு முதல் சில வருடங்களில் தோல்வியடைகின்றன. ஆராய்க.

v. சிறு வியாபர்ரங்களுடன் தொடர்புபடுத்தி பிரசித்தப்படுத்தலையும், விளம்பரப் படுத்தலையும் வேறுபடுத்துக.

vi. இலங்கையில் சிறு வியாபாரங்களின் பிரதான நிதியீட்டல் மூலங்களை அடையாளம் காண்க.

vii. ஏற்கனவேயுள்ள வியாபாரமொன்றினை வாங்குவதைவிட முழுமையான ஒரு புதிய வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதனை ஏன் தொழில் முயற்சியாளர் விரும்புகின்றனர்?

viii. ஒரு புதிய பண்டத்தின் விலையினைத் தீர்மானிப்பதில் ஒரு சிறு வியாபாரமொன்று உபயோகிக்கக்கூடிய தந்திரோபாயங்கள் யாவை?

ix. தொழில் முயற்சியாளனுக்கும், சிறுவியாபாரிக்குமிடையிலான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக.

x. தொழில் முயற்சியாண்மை முயற்சிக்கும், சிறு வியாபார முயற்சிக்குமிடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

xi. ஒரு சிறு வியாபார நிறுவனத்தை இயக்குகின்ற போது ஒரு தொழில் முய்சியாளர் எதிர்நோக்குகின்ற இடர்கள் யாவை?

xii. ஒரு சிறுவியாபாரத்திலுள்ள இடரினைச் சமாளிப்பதற்கு கைக்கொள்ள வேண்டிய அடிப்படை வழிகள் யாவை?

xiii. அநேகமான தொழில் முயற்சியாளர்கள் உற்பத்தி நிறுவனமொன்றினை ஆரம்பிப்பதை விட சில்லறை வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதையே விரும்புகின்றனர். ஏன்?

xiv. கையாடல் இடரினைக் குறைத்துக் கொள்வதற்கு ஒரு சிறுவியாபார நிறுவனம் எடுத்துக்கொள்கின்ற பல்வேறுபட்ட கையாடலுக்கு எதிரான உபாயங்கள் யாவை?

xv. விளம்பரப்படுத்தல் ஊடாகமொன்றினை தெரிவு செய்கையில் சிறு வியாபார முகாமையாளர் கருத்தில் கொள்கின்ற காரணிகள் யாவை?

**(15 x 03 = 45 புள்ளிகள்)**

03. "மிகச் சிறிய, சிறிய, மற்றும் நடுத்தரளவிலான வியாபார முயற்சிகளே நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமான துறைகளாகும்".

அ. இலங்கையை மையப்படுத்தி, மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தரளவிலான வியாபார முயற்சிகளை வரைவிலக்கணப்படுத்தி வேறுபடுத்துக.

**(05 புள்ளிகள்)**

ஆ. நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்திக்கு மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தரளவிலான வியாபார முயற்சிகள் ஏன் முக்கியமானது? விளக்குக.

**(05 புள்ளிகள்)**

இ. மிகச்சிறிய, சிறிய மற்றும் நடுத்தரளவிலான வியாபார நிறுவனங்களின் தோல்விக்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

25 OCT 2003
University, Sri

04. "தொழில் முயற்சியாளர் ஒருவர் ஒரு சிறுவியாபார உரிமையாளர் போல் தோற்றமளிப்பார். ஆயினும் அவர் சில மேலதிக பண்புகளையும் அதிகப்படியான குணாதிசயங்களையும் கொண்டிருப்பார்"

அ. ஒரு தொழில் முயற்சியாளனுக்கும், ஒரு சிறுவியாபார உரிமையாளனுக்கும் இடையிலான வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக.

**(05 புள்ளிகள்)**

ஆ. தொழில் முயற்சியாளரின் வெற்றிக்கு எவ்வகையான தனிப்பட்ட தொழில் முயற்சியாண்மை திறமைகள் தேவையாகவுள்ளது?

**(05 புள்ளிகள்)**

இ. வெற்றிக்குத் தேவையான தொழில் முயற்சியாளர் ஒருவரின் தேவையுடன் சம்பந்தப்பட்ட David McClelland என்பவரின் ஆய்வு மூலம் காட்டப்படுவது யாது?

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**